From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.80 /2021

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Jeyachandran | Father/Husband Name | : Muniyandi |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 10.06.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2024.

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச 317ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**

நான் ஒத்தக்கடையில் குடியிருந்து வருகிறேன். கார் டிரைவராக வேலை செய்கிறேன். அசா1 ராம்குமாரை தெரியும். 30.01.2015ம் தேதி காலை 10.45 மணி இருக்கும். கல்லம்பட்டியிலிருந்து மேலூருக்கு பைக்கில் வந்து கொண்டிருந்தேன். முனி கோவில் பெட்ரோல் பக்கம் வந்தபோது என் பெரியப்பா அய்யனன் விபத்தாகி இருந்தார். அவருக்கு மண்டை மற்றும் உடம்பின் வலதுபுறம் முழுவதும் அடிப்பட்டு இருந்தது. என் பெரியப்பா ரோட்டை குறுக்கே கடக்கும்போது TN 01 AM 3003 கார் அடித்துவிட்டதாக சொன்னார்கள். 108 ஆம்புலன்ஸ்ல் மேலூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டி வந்து அங்கிருந்து மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். அங்கு 2 நாட்கள் சிகிச்சையிலிருந்து இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை:**

சம்பவம் நடந்த போது நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள் என்றால் கல்லம்பட்டியில் இருந்து வந்தேன். நீங்கள் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் இறந்தவர் உங்கள் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.